Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.887/2025

**Depositions of PW- 1**

| Name | திரு. ஜெயக்கொடி | Occupation | தலைமை காவலர் |
|---|---|---|---|
| Father's name | முனியாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of August 2026.

01.08.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.11.2024 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை பெற்று நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சைலா சொர்ணபா மற்றும் முநிகா2902 வைரமணி ஆகிய போலீஸ் பார்ட்டி சகிதம் மம்சாபுரம் மெயின்ரோட்டில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்தபோது மம்சாபுரம் மெயின்ரோடு ஜெயபிரகாஷ் மனைவி சண்முகலட்சுமி வயது 75/2024 என்பவர் தன் வீட்டின் முன்பு வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்றுகொண்டிருந்தவர் எங்களை கண்டவுடன் நகர ஆரம்பித்தவரை மடக்கி பிடித்து பிளாஸ்டிக் பையில் இருந்ததை விசாரித்தபோது அரசு மதுக்கடையிலிருந்து பாட்டில்களை விலைக்கு வாங்கி அதிக விலைக்குவிற்பனை செய்வதற்கு வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். பிளாஸ்டிக் பையில் சுமார் 180 எம்எல் எக்ஸ்பிரஸ் பிராந்தி 27 பாட்டில்கள் இருந்தது. எந்தவித அரசு அனுமதியும் உரிமமும் இன்றி மதுபான பாட்டில்கள் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியையும் சொத்துக்களையும் கைது செய்து நிலையம் கொண்டுவர அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில்தனிநபர் யாரும் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய

நாங்களே கையொப்பமிட்டு எதிரியையும் சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.638/2024 பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**</u>

நாங்கள் மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான் தனி இருசக்கர வாகனத்திலும் மேற்படி காவலர்கள் மற்றொரு இருசக்கர வாகனத்திலும் வந்தார்கள். எனது வாக்குமூலத்தில் நாங்கள் தனித்தனி இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடமானது 9 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி சம்பவயிடமானது மம்சாபுரம் மெயின்ரோடு என்றால் சரிதான். மேற்படி மெயின்ரோட்டில் சம்பவமானது எங்கு நடந்தது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எங்களை பார்த்தவுடன் ஓடிவிட்டார் என்றால் சரியல்ல எங்களை பார்த்ததும் நகர ஆரம்பித்தார். மேற்படி மெயின்ரோடானது மினி பேருந்து வந்துபோகும் ரோடு என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபரை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ எங்களது உயர் அதிகாரிகளிடமோ அனுமதி கடிதம் பெறவேண்டும் என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரமானது மதியம் 02.00 மணி என்றால் சரிதான். அந்த சமயத்தில் அரசு மதுபானக்கடை திறந்திருக்கும் என்றால் சரிதான். மதுபானக்கடை திறந்திருக்கும் சமயத்தில் தனிநபர்களிடம் மதுபானம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். தட்டச்சு செய்து அங்கு வைத்தே பிரிண்ட் அவுட் எடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி பிரிண்ட் எடுத்த நபரை இவ்வழக்கின் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்திருந்தால் எதிரியிடம் அதில் கையெழுத்து பெற்றிருப்போம் என்றாலும் அவர்

அங்கு இல்லாததால் தான் அத்தாட்சியில் அவரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள பிளாஸ்டிக் பை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுவிலக்கு சட்டப்படி நாங்கள் உரிய நடைமுறைகளை பின்பற்றி இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி அதிக விலைக்கு மதுபானம் விற்றதாக யாரும் எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் தற்போது நான் எதிரி மீது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.887/2025

**Depositions of PW- 2**

| Name | திரு. வைரமணி | Occupation | தலைமை காவலர் |
|---|---|---|---|
| Father's name | ராமர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of August 2026.

01.08.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நெடுஞ்சாலை ரோந்து பிரிவு 3 திருவில்லிபுத்தூரில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.11.2024 அன்று 14.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை பெற்று நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சைலா சொர்ணபா மற்றும் தகா.2103 ஜெயக்கொடி ஆகிய போலீஸ் பார்ட்டி சகிதம் மம்சாபுரம் மெயின்ரோட்டில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்தபோது மம்சாபுரம் மெயின்ரோடு ஜெயபிரகாஷ் மனைவி சண்முகலட்சுமி வயது 75/2024 என்பவர் தன் வீட்டின் முன்பு வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்றுகொண்டிருந்தவர் எங்களை கண்டவுடன் நகர ஆரம்பித்தவரை மடக்கி பிடித்து பிளாஸ்டிக் பையில் இருந்ததை விசாரித்தபோது அரசு மதுக்கடையிலிருந்து பாட்டில்களை விலைக்கு வாங்கி அதிக விலைக்குவிற்பனை செய்வதற்கு வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். பிளாஸ்டிக் பையில் சுமார் 180 எம்எல் எக்ஸ்பிரஸ் பிராந்தி 27 பாட்டில்கள் இருந்தது. எந்தவித அரசு அனுமதியும் உரிமமும் இன்றி மதுபான பாட்டில்கள் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியையும் சொத்துக்களையும் கைது செய்து நிலையம் கொண்டுவர அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில்தனிநபர்

யாரும் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையொப்பமிட்டு எதிரியையும் சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.638/2024 பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நாங்கள் மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான் தனி இருசக்கர வாகனத்திலும் மேற்படி காவலர்கள் மற்றொரு இருசக்கர வாகனத்திலும் வந்தார்கள். எனது வாக்குமூலத்தில் நாங்கள் தனித்தனி இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி மதுவிலக்கு காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடமானது 9 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி சம்பவயிடமானது மம்சாபுரம் மெயின்ரோடு என்றால் சரிதான் 3 வது மெயின்ரோட்டில் சம்பவயிடம் அமைந்துள்ளது. மேற்படி மெயின்ரோட்டில் சம்பவமானது எங்கு நடந்தது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் மெயின்ரோடு 3 ன் பாலம் அருகே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி எங்களை பார்த்தவுடன் ஓடிவிட்டார் என்றால் சரியல்ல எங்களை பார்த்ததும் நகர ஆரம்பித்தார். மேற்படி மெயின்ரோடானது மினி பேருந்து வந்துபோகும் ரோடு என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபரை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ எங்களது உயர் அதிகாரிகளிடமோ அனுமதி கடிதம் பெறவேண்டும் என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரமானது மதியம் 02.00 மணி என்றால் சரிதான். எதிரி மேற்படி மதுபானங்களை அரசு மதுபானக்கடை மூடிய பின்பு விற்பதற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த சமயத்தில் அரசு மதுபானக்கடை திறந்திருக்கும் என்றால் சரிதான். மதுபானக்கடை திறந்திருக்கும் சமயத்தில் தனிநபர்களிடம் மதுபானம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். தட்டச்சு செய்து அங்கு

வைத்தே பிரிண்ட் அவுட் எடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி பிரிண்ட் எடுத்த நபரை இவ்வழக்கின் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்திருந்தால் எதிரியிடம் அதில் கையெழுத்து பெற்றிருப்போம் என்றாலும் அவர் அங்கு இல்லாததால் தான் அத்தாட்சியில் அவரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள பிளாஸ்டிக் பை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுவிலக்கு சட்டப்படி நாங்கள் உரிய நடைமுறைகளை பின்பற்றி இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி அதிக விலைக்கு மதுபானம் விற்றதாக யாரும் எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் தான் கிடைத்தது. எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் தற்போது நான் எதிரி மீது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.